<u>சுருக்கம்</u>

உயர்கல்வி – 2008–2009–ஆம் கல்வியாண்டு பொறியியற் மாணவர் சேர்க்கை – சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெறும் கலந்தாய்வில் பங்கேற்கவரும் மாணவர் மற்றும் உதவிக்காக வரும் ஒரு நபருக்கும் 50 சதவிகித இருவழி பயணக் கட்டணச் சலுகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜே2) துறை

அரசாணை (நிலை) எண்.267 நாள்:3.7.2008.

ஆனி 19,

திருவள்ளுவர் ஆண்டு 2039.

<u>படிக்கப்பட்டது:</u>

1. அரசாணை (1டி) எண்.94, உயர்கல்வி (ஜே2) துறை, நாள் 9.7.2007.
2. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண் 3866/ECA1/2008/Tamil Nadu Engineering Admission/Bus Fare Concession, நாள் 17.3.2008.

----

<u>ஆணை:</u>

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2007–2008–ஆம் ஆண்டில் பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை தொடர்பாக சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெறும் கலந்தாய்வில் கலந்துகொள்ள வெளியூரிலிருந்து சென்னை வரும் மாணவர் மற்றும் அவருடன் உதவிக்காக வரும் ஒரு நபருக்கும் அரசுபோக்குவரத்துக் கழக பேருந்துகளில் 50 சதவிகித இருவழி பயணக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டது. மேலும் அவ்வரசாணையில் இச்சலுகையினை நடைமுறைப்படுத்தும்போது ஆகும் முழு செலவினத்தையும் அந்த மாவட்ட போக்குவரத்து கழகத்திற்கு தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் வழியாக திரும்ப (Reimbursement) வழங்கப்படும் என்றும், மாணவர்கள் அண்ணா பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் கலந்தாய்விற்கான அனுமதி கடிதத்தின் ஒளி நகலினை சம்பந்தப்பட்ட போக்குவரத்து அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் ஒளிநகலினை பெற்றுக் கொண்ட அலுவலர்கள் 50 சதவிகித கட்டணச் சலுகை வழங்கப்பட்டது என அக்கடிதத்தின் முன்பக்கத்தில் சான்றளித்தபின்பு தக்க பயணச் சீட்டுகளை (1+1) மாணவர்களுக்கு வழங்குவர் என்றும் இப்பயணக் கட்டண சலுகையை மாணவர்கள் துய்ப்பது குறித்த விரிவான சுற்றறிக்கையினை எல்லா அரசு போக்குவரத்து மேலாண் இயக்குநர்களுக்கும் அனுப்புமாறும் மற்றும் இச்சலுகை குறித்து சம்பந்தப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும் தெரிவிக்கும் வகையில் விளம்பர படுத்தவும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதத்தில் சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் மட்டும் 2007–2008–ம் ஆண்டில் கலந்தாய்வு நடைபெற்றதையொட்டி வெளியூர் மாணவர் மற்றும் ஒரு உடனாளுக்கு (1+1) வழங்கப்பட்ட 50 சதவிகித இருவழிப் பயணச் சலுகை பெரும் வரவேற்பு பெற்றுள்ளது என்றும் இக்கல்வியாண்டிலிருந்து தொடரும் கல்வியாண்டுகளில் மேற்படி பயணச் சலுகை வழங்கப்படலாம் என்றும் இந்தக் கல்வியாண்டில் 10 சதவிகிதம் கூடுதலாக மாணவர்கள் பயணக் கட்டணச் சலுகையை அனுபவிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும், இதற்கென ஏற்படக்கூடிய செலவினம் ரூ.70 இலட்சம் என கணிக்கப்படுவதால் இச்செலவினத்தை, 2008–2009–ம் நிதியாண்டில் திருத்திய மதிப்பீட்டில் (Revised Estimate) ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கும்படி அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் உள்ள தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, 2007–2008–ஆம் ஆண்டு வழங்கப்பட்டதுபோல 2008–2009–ஆம் கல்வியாண்டிற்கும் சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெறும் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வில் கலந்துகொள்ள வெளியூரிலிருந்து வரும் மாணவர் மற்றும் அவருடன் உதவிக்காக வரும் ஒரு நபருக்கும் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 50 சதவிகிதம் இருவழி பயணக் கட்டணச் சலுகை வழங்கி, இச்சலுகையினை நடைமுறைப் படுத்தும்பொழுது ஆகும் முழுச் செலவினையும் அந்தந்த மாவட்ட அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் மூலமாக திரும்ப வழங்குவதற்கு பதிலாக +2, தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு பேருந்து பயணக் கட்டணச் சலுகையை தொடர் திட்ட செலவினமாக (Regular Scheme) நிதிநிலை ஒதுக்கீட்டில் ஒதுக்கீடு செய்வது போல இப்பயணக் கட்டணச் சலுகை வழங்குவது தொடர்பாக ஆகும் செலவினம் ரூ.70 இலட்சத்தை போக்குவரத்துறையின் மானியக் கோரிக்கை எண்.48–ல் 2210-80-AA-1102 என்ற கணக்குத் தலைப்பின் கீழ் தொடர் திட்ட செலவினமாக (Regular Scheme) ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடுகிறது. மேலும், மாணவர்கள் அண்ணா பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் கலந்தாய்வுக்கான அனுமதிக் கடிதத்தின் ஒளிநகலை சம்பந்தப்பட்ட போக்குவரத்து அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், ஒளிநகலைப் பெற்றுக்கொண்ட அலுவலர்கள் 50 சதவிகித கட்டணச் சலுகை வழங்கப்பட்டது என அனுமதிக் கடிதத்தின் முன்பக்கத்தில் சான்றளித்தப்பின்பு தக்க பயணச் சீட்டுகளை (1+1) மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.2010/FS/P/2008, நாள் 2.7.2008–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25
அனைத்து அரசு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள்
(தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25 வழியாக)
அரசு செயலாளர், போக்குவரத்து துறை, சென்னை–9.
அரசு செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு நிதித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9.
நிதித் (கல்வி–1/வரவு செலவு) துறை, சென்னை–9.
உயர்கல்வித் துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை–9.
உதிரி/இ.கோ.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.